# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.80/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயந்தி | மதம் | : இந்து |
| க/பெ | : குப்பாராவ் | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : அரக்கோணம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : அரக்கோணம் |

**27.11.2025**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி அங்கம்மாளை எனக்கு தெரியுமா என்றால் நான் நீதிமன்றம் வரும்போதுதான் பார்த்துள்ளேன். அதற்கு முன்பு எனக்கு அவரை தெரியாது. நான் அரக்கோணத்தில் எத்தனை வருடங்களாக குடியுள்ளேன் என்றால் பிறந்ததில் இருந்து அங்குதான் உள்ளேன். திருமணத்திற்கு பின்பு ஒரு 6 வருடங்கள் மட்டும் சென்னையில் இருந்தேன். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.42/10ல் 83 செண்ட் ஆகும். தாவா சொத்து நஞ்சையா புஞ்சையா என்றால் புஞ்சை ஆகும். என் அப்பா கிரையம் வாங்குவதற்கு முன்பு சொத்து முனுசாமிக்கு பாத்தியமாக இருந்தது என்றால் ஆமாம். முனுசாமியிடம் இருந்துதான் என் அப்பா கிரையம் வாங்கினார். முனுசாமியிடம் இருந்து என் அப்பா எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் 1973ல் வாங்கினார்.

2. என் அப்பா தாவா சொத்தை மட்டும் கிரையம் பெற்றுள்ளாரா அல்லது வேறு சில சொத்துக்களையும் கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் தாவா சொத்தையும் வேறு சில சொத்துக்களையும் கிரையம் பெற்றுள்ளார். என் அப்பா கிரையம் பெற்ற வேறு சில சொத்துக்களின் புல எண் சொல்ல முடியுமா என்றால் புல எண்.32/8, 54/1, 55/1, 42/10 ஆகும். என் அப்பாவின் சொந்த ஊர் எது என்றால் அரக்கோணம் ஆகும். என் அம்மா அப்பா இருவருமே அரக்கோணம்தான். எனக்கு ஒரு தம்பி உள்ளார் என்றால்

சரிதான். பரந்தாமன் ஆவார். என் அப்பாவும் என் தம்பியும் சேர்ந்து 06.12.1973ல் வாதி அங்கம்மாளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. கிரையம் பெற்ற தேதியில் இருந்து இன்றைய தேதி வரை வழக்கு சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை. அது காலி மனையாகும். அப்படியேதான் உள்ளது. நாங்கள்தான் அனுபவிக்கிறோம்.

3. தாவா சொத்தின் பட்டா, சிட்டா, அடங்கல் அனைத்தும் வாதி பெயரில் உள்ளது என்றால் பட்டாவை UDR ல் அவர் பெயருக்கு மாற்றி கொண்டுள்ளார். சிட்டாவும் அடங்கலும் எங்கள் பெயரில்தான் உள்ளது. தாவா சொத்திற்கு வரி யார் செலுத்துகிறார் என்றால் நான்தான் 2020 வரை செலுத்தியுள்ளேன். அதன் பிறகுதான் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். என் அப்பாவிற்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் நான், ஜெயஸ்ரீ, திலகா, ஷோபா, பரந்தாமன் ஆவோம். இதில் ஜெயஸ்ரீ இறந்துவிட்டார். ஜெயஸ்ரீக்கு ராஜேஷ், அனிதா, ஹர்ஷிதா ஆகிய பிள்ளைகள் உள்ளார்கள். தாவா சொத்து என் அப்பா சுயமாக கிரையம் வாங்கி அவரே கிரையம் கொடுத்த பின்பு எங்களுக்கு அந்த சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் கிரையம் செய்தது எங்களுக்கு தெரியாது. நாங்கள் வில்லங்கம் பார்த்தோம். இன்றுவரை அது வில்லங்கத்தில் வரவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)